முருகப்பெருமான் துணை

**மகான் காலாங்கிநாதர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.10.2022, சனிக்கிழமை

1. வானவர்கள் போற்றும் வண்ணம்
வள்ளலாய் வந்த அரங்கனே
தானதருமத்தின் பலம் தன்னை
தரணியோர் உணர்ந்து வழிவர
2. வருகவே அன்னதான சேவை
வடிவமைத்து அருளும் தவசியே
ஆறுமுக ஞானியே பெருமை கூறி
அறிவிப்பேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை சுபகிருது துலை திங்கள்
அய்ந்தான திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05 ம் நாள் 22.10.2022, சனிக்கிழமை)
ஆசிதனை காலாங்கிநாதர் தானும்
அரங்கன் பலம் உலகறிய உரைப்பேன்
4. உரைக்கவே பிரணவக் குடிலும்
உலகை காத்து மீட்டிட
அறம்பெருகி ஞான பூமியாக
அகிலம் ஆறுமுகன் கருணைபெற
5. கருணை பெற வேண்டிய நல்
கடமைகளை சேவை ஆக்கி
பேருலகம் எங்கும் தொண்டர்களை
பிரணவசக்தியாக அனுப்பி
6. அனுப்பி உலகம் எங்கும் சைவம்
ஆற்றல் மிக்க பழக்க வழக்கமாகி
ஞானம் பெருக உலகமக்கள்
நம்பிக்கைபட வாழவேண்டுமென
7. வேண்டுதல் என்றால் ஆறுமுக
வேலவனே கடவுள்ளன போற்றி
தொண்டுடன் வரவேண்டுமென
தேசிகன் படைத்த கட்டமைப்பு
8. அமைப்பிலே கலியுக மக்கள்
அனுகிச் சரணாகதி அடைய
அமைப்பான ஞான உலகாக
அகிலம் மாற்றம் கண்டு
9. கண்டுமே நல்ல பாதுகாப்பும்
கண்டுமே தருமம் வளர்த்து
தொண்டுவழி உலகோர் இணைந்து
தேசிகனால் திருவருள் பெற்று

10. பெற்றுமே ஞானவான்களெனும்
பெருமை மிக்க நிலை உயர்ந்து
ஆற்றல்பட கலியில் ஞானிகளாகி
அரங்கன் அவதார நோக்கமான

11. நோக்கமான ஞான ஆட்சிதனை
நிலமதனில் படைத்து சிறப்பர்
தேக்கமின்றி அரங்கனால் உயர்வர்
தெரிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–